# அருள்மிகு ஸ்ரீ வாழைத்தோட்டத்து அய்யன் கோயில் தலவரலாறு

# The Sacred History of Arulmigu Sri Valaithottathu Ayyan Temple

***த. திவ்யா***
தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்: 20PHTMP002
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்
தமிழ்நாடு, இந்தியா

***முனைவர் த. நாகம்மாள்***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்
தமிழ்நாடு, இந்தியா

**D. Divya**
*Research Scholar of Tamil*
*Reg.No: 20PHTMP002*
*Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore*
*Tamil Nadu, India*

**Dr. T. Nagammal**
*Assistant Professor of Tamil*
*Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore*
*Tamil Nadu, India*

**Citation**: Divya, D. and T. Nagammal. “The Sacred History of Arulmigu Sri Valaithottathu Ayyan Temple.” *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 4, 2026, pp. 1-13.

*https://doi.org/10.5281/zenodo.21259847*

***ஆய்வுச் சுருக்கம்***
*வாழைத்தோட்டத்து அய்யன் ஆய்வானது ஒரு முழு கள ஆய்வாகும். இத்திருத்தலத்தின் புராண வரலாற்றின் படி ஒரு சித்தாரின் வழி போதிக்கப்பட்ட ஒரு சிறப்புப் பெற்ற திருத்தலமாகும். திருப்பூரிலுள்ள வாழைத்தோட்டத்து அய்யன் கோயிலினை பல்லடம் வட்டாரத்திலுள்ள பகுதிலுள்ள மக்கள் விரும்பி வணங்கும் கோயிலாகும். இக்கோயில் கொங்கு மண்டல மக்களால் போற்றப்படுகிறது. தீரா நோய்களையும், தோரணங்களையும் தீர்க்கும் இந்த கோயிலின் சிறப்பினை கள ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. வாழைக்தோட்டத்து அய்யன் கோயிலில் கிடைக்கும் புற்றுமண்ணினை சிறிது எடுத்து வீடுகள் மற்றும் வயல்வெளிகளில் தெளித்தால் அங்கு பாம்புகள் மற்றும் விஷப்பூச்சிகள் அண்டாது என்ற நம்பிக்கை கொங்கு பகுதி மக்களிடையே உள்ளது. தீரா தோஷங்கள், நோய்களை தீர்த்து மக்களின் துன்பங்களை நீக்குவதே இக்கோயிலின் சிறப்பாகும். பிறகோயில் கருவறையை விட இக்கோயிலின் கருவறைக்குள் ஒரு சாதாரண மனிதன் சென்று இறைவனை வேண்டி இறைவனுக்கு அருகிலுள்ள புற்றுமண்ணை எடுத்து வர முடியும் என்ற சிறப்பினை இத்திருத்தலத்தில் காணலாம். மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படும் இப்புற்றுமண் எடுக்க எடுக்க குறையாது என்பது இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் முழுமையாக நம்பிக்கையாகும்.*

***திறவுச்சொற்கள்:*** *நேர்த்திக்கடன், கோயில் வடிவமைப்பு, வாழைத்தோட்டம் அய்யன் கோயில் தலவரலாறு*

**Abstract**
*The study of Valaithottathu Ayyan is a comprehensive field study. According to the mythological history of this sacred site, it is a distinguished shrine established and propagated through the guidance of a Siddhar (saint). The Valaithottathu Ayyan Temple in Tiruppur is a temple that is deeply revered and worshipped by*

*the people of the Palladam region. This temple is highly respected by the people of the Kongu region. Through field research, one can understand the unique significance of this temple, which is believed to cure chronic illnesses and remove various afflictions. Among the people of the Kongu region, there is a belief that if a small amount of the anthill soil (putrumann) obtained from the Valaithottathu Ayyan Temple is sprinkled in homes and agricultural fields, snakes and poisonous insects will not approach those places.*

*The special feature of this temple is its belief in relieving incurable ailments, removing doshas (spiritual afflictions), and alleviating the sufferings of devotees. Unlike the sanctums of many other temples, the sanctum of this temple allows an ordinary devotee to enter, pray directly to the deity, and collect the sacred anthill soil located near the deity.*

*Devotees who visit this temple firmly believe that the anthill soil, which is used for medicinal purposes, never diminishes no matter how much is taken. This enduring abundance of the sacred soil is regarded as one of the remarkable features of the temple.*

***Keywords**: Votive Offerings, Temple Architecture, and The Sacred History (Sthala Varalaru) of Valaithottam Ayyan Temple.*

**முன்னுரை**

*சின்னையன் எனும் சிறுவன் விஷ ஐந்துகளிடமிருந்து மக்களை பாதுகாக்கும் மந்திரகளை போதித்து துன்பங்களை தீர்த்து வந்தான். ஞானசிரியர் எனும்; முனிவர் சர்வ விஷ சம்கார மந்திரத்தினை போதித்தார். கோயிலின் அடுத்த மிகப் பெரிய குருக்களாக உபகாரம் செய்ய வந்தான் சின்னையன். இப்புராணச் செய்தியின் அடிப்படையில் இத்திருத்தலமானது தோற்றம் பெற்றது. இக்கோயிலின் அமைப்புகள், சிறப்புப் பெற்ற சிலை வடிவங்கள் ஆகியவை தற்போது இத்திருத்தலத்தில் உள்ள வடிவமைப்புகள், வழிபாடுகள் நம்பிக்கைகள் ஆகியவை தெளிவுச் செய்யப்பட்டுள்ளது. இத்திருத்தலத்தின் அமைப்புகள், நம்பிக்கைகள், வழிபாடுகள் குறித்து மக்களின் மரபுகள், கோயிலின் இருப்பிடம், அரசு தற்போது கோயிலுக்கு செய்துள்ள உதவிகள் ஆகியன அனைத்துச் செய்திகளும், புராணச் செய்திகள் மட்டுமின்றி களஆய்வு வழியாகவும் அறிய முடிகிறது.*

**கோயில் அமைவிடம்**

*கோவை மாவட்டம், பல்லடம் வட்டத்தைச் சார்ந்த சோமனூருக்கு அருகில்அய்யம்பாளையம் என்ற கிராமம் உள்ளது. அது பல்லடத்திலிருந்து தெற்கில் 15கி.மீ தொலைவில் உள்ளது. அக்கிராமத்திற்கு தெற்கில் ஒரு பாலாங்கு தூரத்தில் உள்ள பெருந்தோட்டம் என்னும் இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. அய்யனின் பெயராலே இவ்வூர் அய்யம்பாளையம் என அழைக்கப்படுகிறது.*

**வாழைத்தோட்டத்து அய்யன் தோற்றம்-வளர்ச்சி**

*சின்னையன்அவர்கள் தன்னுடைய இளமைக் காலத்தில் அய்யம்பாளையத்திற்கு அருகிலுள்ள காளிபாளையம் என்ற ஊரில் வாழைத்தோட்ட மொன்றை குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து வந்தார். அதனால் அவரை ஊரார் அனைவரும் வாழைத்தோட்டத்து அய்யன் என்று அழைத்து வந்தனர். அதனால் அவரது இயற்பெயர் மறைந்து சிறப்பு பெயரே வழக்கத்தில் இருந்தது. ஐயன் என்பது பெரியவர்களுக்கு மரியாதையாக வழங்கப்படும் பெயராகும்.*

*உலகில் மக்களாய் பிறந்த அனைவரும் தானமும் தவமும் செய்தவராயின் தேவர் உலகம் வழித்திறக்கும் என்பது சான்றோர் வாக்கு. அதற்கேற்ப வாழ்ந்தவர் அய்யன். அவரை அனைவரும் போற்றுவதற்குச் சான்றாக அமைந்ததே வாழைத்தோட்டத்து அய்யன் கோயிலாகும்.*

**அய்யன் கோயில் தலவரலாறு**

*வாழைத் தோட்டத்து அய்யன் என்று பெயர் பெற்ற சின்னையவேள் அவர்களுடைய பூர்வீகதலம் கொங்கு மண்டலத்தில் அவிநாசி என்னும் ஊரில் உள்ள சிவத்தலத்தின் கீழ்த் திசையில் மோப்பிரிப்பாளையம் என்னும் சிற்றூர் உள்ளது. இச்சிற்றூரில் பெருங்குடிப் பிரபுவாக விளங்கியவர் சின்னையக் கவுண்டர் என்பார். இவருக்கு நெடுநாள் குழந்தை இல்லாமல் பின் ஆண் குழந்தை பிறந்தது. அவனது ஐந்து வயதில் சின்னையக் கவுண்டர் இறந்தார். அவர் இறந்தபின் கைம்பெண் வாழ்க்கையை அடைந்த அவரது மனைவி அவ்வூரில் வாழ்வதற்கு மனமில்லாமல் தனது புதல்வனான செங்காளியப்பனை அழைத்துக் கொண்டு தனக்கு நெருங்கிய உறவினரான அய்யம்பாளையம் ஸ்ரீ பச்சையண்ணக்கவுண்டர் என்பவரை அடைந்து தன்னையும், தன்பிள்ளையையும்ஆதாரிக்கும்படி கேட்டுக் கொண்டாள். பச்சையண்ணக்கவுண்டரும். அவர்கள் இருவரையும் தன் பண்ணையில் வேலைபார்க்கும்படி உத்தரவிட்டார். தாயும் பிள்ளையும் அப்பண்ணைக்காரியத்தில் கண்ணும் கருத்துமாய் வேலை செய்து வந்தார்கள். அவர்களுடைய கபடமற்ற உழைப்பையும், கள்ளமற்ற மனதையும் கவனித்து பச்சையண்ணக்கவுண்டர் தன்னுடைய மகளை செங்காளியப்பனுக்கு திருமணம் செய்து கொடுத்து அவரை தனது மருமகன் ஆக்கிக் கொண்டார். செங்காளியப்பன் என்பவருக்கும் அவரது மனைவிக்கும் எட்டு பெண் குழந்தைகள் பிறந்தது. ஒன்பதாவதாக ஆண் பிள்ளையாகச் சின்னையன் பிறந்தார்.*

**காலக்கணிப்பு**

*காலத்தை கணித்து கூறுவது காலக்கணிப்பு ஆகும். தமிழர்களி காலக்கணிப்பு முறை சூரியனின் இயக்கத்தை கணக்கிடப்படுகிறது. மையமாக வைத்து*

***மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்***
***துறந்த ஒழுக்கம் கிழவற்கு இல்லை (தொல் களவி ப.146)***

*என்ற வரிகளின் மூலம் தொல்காப்பியத்தில் களவியல் என்ற இயலில் நாள், நட்சத்திரம் பற்றிய செய்திகள் இடம்பெறுவதை அறியமுடிகிறது.*

*செங்காளியப்பன் புதலவாரன சின்னையன் ஜன்னகாலம் கலியுக சகாப்தம் 4878 சாலிவாகன சகாப்தம் 1699-கருச் சரியான ஏவிளம்பி வருஷம் தட்சணாயண புண்ணியக காலம். மார்கழி மாதம் 18ஆம் தேதி வியாழக்கிழமை கிருஷ்ணபட்சம் ஏகாதசியும், விசாக நட்சத்திரமும் திருதிய நாம யோகமும், கௌலவாகரணமும் கூடிய சுபதினத்தில் பகல் 18ஃ2 நாழிகை என்று அனுப்பர்பாளையம் சோதிட சாஸ்திர விற்பன்னரான ஸ்ரீ அ.இரா.முருகையாஅவர்களால் நிர்ணயிக்கப் பெற்றிருக்கிறது. (சி.கு.நாராயணசாமிமுதலியார், பல்லடம், வயது - 81)*

**கோயிலின் தோற்றம்**

*வளம் சிறந்த அருள்மிகு ஸ்ரீ வாழைத்தோட்டத்து அய்யன் ஆலயத்திலிருந்து யாத்ரீகர்கள் கவனித்தால் அவர்கள் கண்களுக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் பெத்தமுச்சிப்பாளையத்தின் நடுவில் உயர்ந்த தெற்கு பக்கமாக உள்ள கோபுரத்துடன் விளங்கும் விநாயகா கோயிலும், வடக்கு பக்கமாக ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கோபுர முகப்புடன் திகழும் சிந்தாமணி விநாயகர் கோயிலும், கோபுரங்களுடன் கூடிய இவ்விரு கோயில்களுக்கும் நடுவில் அய்யன் கோயிலுக்குள் சித்தி விநாயகர் திருக்கோயில் அழகு பெற்றுப் பொலிவது தென்படும்.ஒரே சமயத்தில் பிரணவ மூர்த்தியாகிய மூன்று விநாயகர் கோயில்களும் உயர்ந்த கோபுரங்களுடன் விளங்குகின்ற இக்காட்சி மனதிற்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.*

**தலவிருட்சம்**

*ஒவ்வொரு கோயிலிலும் தலவிருட்சம் இருக்கும். மக்கள் தலவிருட்சத்தையே கடவுளுக்கு இணையாக வைத்து வழிபடுகின்றனர். அய்யன் கோயிலின் தலவிருட்சம் கிளுவை மரமாகும் ஆனால் தற்போது அதை ஒட்டி ஈச்சமரம் வளர்ந்துள்ளது. இக்கோயிலின் சிறப்பு அம்சமாகும். தலவிருட்சம் கருவறையில் இருப்பதுவாழைத்தோட்டத்து கோயிலின் காப்பக்கிரகம்கோயிலின் நுழை வாயிலினுள் சென்றால் நேர் எதிரில் இருப்பதே வாழைத்தோட்டத்து அய்யன் கோயில் காப்பகிரகம். கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூரை இதன் மதிற்கவாகள் வெட்டிவேர் பந்தலால்அமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பக்கிரகத்தின் உட்புறம் பளிங்குக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளது.*

*கர்ப்பகிரகத்தின் நடுவில் முதலில் கிளுவை மரம் இருந்தது. அது பட்டுப் போனது, அதன்பின் அவ்விடத்தில் தானாகவே கள்ளச்சி மரம் ஒன்று வளர்ந்தது. அம்மரம் இன்று மூலவர் உள்ள இடத்தில் அமைந்துள்ளது. அம்மரம் உருவாகி சுமார் 70 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். அம்மரத்தின் கீழ் லிங்கச் சிலையும் அய்யனின் உருவமும் உள்ளது.*

*மரத்தின் கிளைகளில் மணிகளும், விளக்குகளும் தொங்க விடப்பட்டுள்ளது. மரத்தின் கீழே சி றிது தென்புறமாக நான்கு அடி ஆழமுள்ள மண்புற்று ஒன்று உள்ளது. அப்புற்றிலுள்ள மருந்தாகிய மண்தான் சர்வ விசங்களையும், வியாதிகளையும் உடலில் பூசியவுடன் நோயை போக்கும் மகத்துவம் பெற்றது கர்ப்பகிரகத்தில் நெய்த்தீபம் மட்டும் ஏற்றி வைக்கப்படுகிறது.*

**கோயிலின் பிற சன்னதிகள்**

*அருள்மிகு ஸ்ரீ வாழைத்தோட்டத்து அய்யன் கோயிலில் பிற தெய்வங்களின் சன்னதிகள் கீழ்க்கண்டவாறு கூறலாம்.*

- *நால்வர் சன்னதிகள்*
- *அருள்மிகு நடராசர் சன்னதி*
- *ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்*
- *நவகிரகங்கள்*
- *சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை*
- *அரசமரப் பிள்ளையார் சன்னதி*
- *இராகு கேது சிலைகளுடன் பிற அமைப்புகள்*

**புற்று மண் மருந்தானது**

*அய்யன் கோயிலில் சிவலிங்கம் எழுந்தருள பெற்ற சில வாரங்களுக்குப் பிறகு கிளுவை மரத்தின் தென்புறத்தில் மண்புற்று வளர்ந்து அது விசநோய்களுக்குச் சஞ்சீவியாய் விளங்கியது. அதைக் கண்ட அய்யனின் மூத்த மகன் அது தெய்வத்தோற்றமென மதித்து அப்புற்று அழிவு அடையாதபடி பாதுகாத்து வந்தார். ஒருநாள் சிறுவன் ஒருவன் பாம்புக்கடியால் உடல் முழுவதும் தடிப்பு ஏற்பட்டுத் துன்பப்பட்டான். அப்போது அக்கோயிலுள் இருந்த புற்றுமண்ணை எடுத்து நீரில் குழைத்து உடம்பில் பூசினால் நோய் நீங்கும் என்ற எண்ணந்தோன்ற அவ்விசக்கடி மறைந்தது. அன்றுமுதல் விசக்கடிகளுக்கு அம்மண்ணை நல்ல மருந்தாக எண்ணி உபயோகித்தனர்.பின்னர், சி ன்னையன் பேரன் முறையான கோவித்தப்பன் என்பவன் பாம்பால் ப்பட்டான் பல மாந்தரீகர்களால் மந்திரிக்கப் பெற்றும் விஷம் இறங்காததால் அன்அய்யன் ஆலயத்தில் உள்ள லிங்கத்தை வழிபட்டு புற்றுமண்ணை எடுத்து அக்கோயிலில் மயக்கமுற்று படுத்துக் கிடந்தான். சிறிது நேரத்திற்குள் அவன் விம் இறங்கப்பெற்று பூரண குணுமடைந்தான்.*

**இறைச்சி உண்டவனுக்கு இறைவன் தண்டனை**

*ஒருநாள் அய்யன் ஆலயத்திற்கு அருகில் உள்ள கிணற்றில் இறைச்சி உண்ட ஒருவன் ஏற்றத்திலிருந்து நீர் இறைத்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் நீர் இறைக்க முடியாதவாறு நாகம் ஒன்று அவனை விரட்டியது. இதனை அவன் இராசியண்ணனிடம் கூற இவன் மாமிசம் உண்ணாத ஒருவனை நீர் இறைக்கச் செய்தான் அப்பாம்பு மறைந்தது. அன்று முதல் மாமிசம் உண்டவர்களுக்கு அவ்விடத்திற்கு செல்ல அனுமதியில்லை.*

*அதேபோல அய்யன் கோயிலின் திருமதிலை புதுபிக்க வந்த ஆட்கள் ஒருநாள் மாமிசம் உண்டுவிட்டு மதிலின் உட்புறத்தில் வேலை செய்து கொண்டிருந்தனர். அப்போது அவர்களது கண்களுக்கு எங்கும் பாம்பாகவே தெரிந்தது. பின்பு அவர்கள் மாமிசம் உண்டதை அறிந்த இராசியண்ணன் அவர்களை விலக்கி விட்டு ஆலயத்தை சுத்தம் செய்து விட்டு வேறு ஆட்களை வைத்து கோயிலின் திருப்பணியை முடித்தார்.*

*வள்ளுவர் இக்கருத்தை வலியுறுத்தும் வகையில்,*

***அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்***
***உயிர்செகுத்து உண்ணாமை நன்று (குறள் 259)***

*என்று புலால் மறுத்தல் பற்றி கூறியுள்ளார்.*

**தீட்டுடையோன் திருவிளக்கேற்ற துணிதல்**

*ஒருநாள் மாலை நேரத்தில் அய்யனின் கடைசி மகனான முத்துசாமி. அவனது மனைவி குழந்தை பெற்றிருப்பதை மறந்து வழக்கம்போல் கோயிலுக்குள் திருவிளக்கேற்ற துணிந்தான். அப்போது கருநாகம் படம் எடுத்து அவனை எதிர்த்தது. அவன் அஞ்சி அண்ணனிடம் கூற தம்பி குழந்தை பிறந்தது திட்டாயிருக்கும் போது கோயிலுக்குள் நுழைந்து விளக்கு ஏற்ற நினைத்தது தவறு. உன்னுடைய நீட்டு முடியும் வரையில் வேறொருவரைக் கொண்டு விளக்கு ஏற்ற செய்தார். அவ்வாறு செய்ய அதற்குப் பிறகு பாம்பு தென்படவில்லை.இவ்வாறு அய்யன் தன் மகன் தவறு செய்த போதும் அவனுக்குத் தண்டனை கொடுக்கத் துணிந்தார் என்று இந்நிகழ்ச்சியைக் கண்ட அனைவரும் புகழ்ந்தனர்.*

**சாமளாபுரம் சிவன் கோயில் குடமுழுக்கு**

*ஒவ்வொரு ஆலயத்திலும் குடமுழுக்கு 12ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றன. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் அவ்வகையில் கோபுரத்திற்கு புனித நீர்ஊற்றி சக்திபெறச் செய்தலே குடமுழுக்கின் சிறப்புகளாகின்றன. (ந.சித்ரா,பக் 236)*

*என்ற கட்டுரையின் சில வரிகளுக்கேற்ப குடமுழுக்கின் சிறப்பினை அறிய முடிகிறது. இதனை போலவே அய்யம்பாளையத்திற்கு வடமேற்கில் சாமளாபுரம் என்னும் ஊரில் பழமையான சிவத்தலம் ஒன்று உள்ளது. அக்கோயிலில் விளங்கும் சிவபிரானது பெயர் சோழீச்சுவர தேவர். அந்த கோயில் பத்துக் கிராமத்தார்களது ஆதினத்திற்கு உட்பட்டிருந்தது. அது மிகவும் பழுதுபட்டு புதுபிக்க வேண்டிய நிலையில் இருந்தது. சிவபக்தரான இராசியண்ணன் அதனை புதுபிக்க எண்ணி பத்துக் கிராமங்களுடன கலந்து ஆலோசித்து முடிவு செய்ய கூட்டம் கூட்டினார்.*

*அனைவரும் ஒன்றுகூடி பேசியும் ஒற்றுமை இல்லாததால் அந்தக்கிராமக் கூட்டம் எந்த முடிவும் இல்லாமல் கலைந்தது. அதனால் மனம் உடைந்து வீடு சென்ற இராசியண்ணனின் கனவில் அய்யன் தோன்றி, அன்பனே! வருந்தாதே உன்னுடைய விருப்பத்தை நான் நிறைவேற்றுகிறேன் என்று கூறி மறைந்தார். பீள் விடியற்காலையில் வணிகரும் பெரியவர் ஒருவர் வந்து உனது விருப்பப்படி நான் நடக்கச் செய்கிறேன் என்னுடன் வா என்று அழைத்துக் கொண்டு போய் கிராம மக்களை*

*சம்மதிக்கும்படி செய்து விட்டு மறைந்தார். பின் நல்ல நாளில் கோயில்திருப்பணி தொடங்கப்பெற்று கிராமத்தாரின் ஆதரவினால் கும்பாபிசேகம் சிறப்பாக நிறைவேறியது.*

**விஷ்ணு கோயில் கொடிக்கம்பம் நாட்டுதல்**

*சிவன் கோயில் கும்பாபிசேகம் முடிந்த பிறகு அச்சாமளாபுரத்தில் கோயில் கொண்டுள்ள வரதராஜ பொருமாளுக்கு கொடிக்கம்பம் நாட்ட மக்கள் விரும்பினர். அதற்கு சாமளாபுரத்திற்கு கீழ்த்திசையிலுள்ள கொங்கணகிரி என்னும் வேலாயுதசாமி கோயில் உள்ள மலையில் பிளந்து எடுத்து வரப்பட்ட கற்றூணை பெரிய வண்டியில் ஏற்றி ஆயிரம் பேர்கள் கூடி இழுத்துக் கொண்டு வருகையில் கூட்டத்தில் நெருக்குண்ட மூவர், வண்டிச் சக்கரத்தில் சிக்கி உயிர் இழந்தனர்.*

*அவர்களது மரணத்தைப் பற்றி துரைத்தனத்தாருக்கு அறிவிக்கப்பட்டது. அன்றிரவு திருவாதிரை நடசத்திரம், சிவச்செல்வர் சின்னையன் அவர்களது குருபூசை நாள். அதனை முடித்துவிட்டு இராசியண்ணன் உறங்கிக் கொண்டிருந்தார். அவருடைய கனவில் அய்யன் தோன்றி குழந்தாய் இறைவனருளால் எல்லாம் இனிது முடியும் என்று கூறிவிட்டு பின் பல்லடம் தாசில்தார் வெங்கடாசலம்பிள்ளை அவருடைய கனவில் தோன்றி நடந்த நிகழ்வை அடியவரை போல கூறியது தெய்வ நிகழ்ச்சியாகும். அம்மரணத்தை பற்றி நாளை உமக்குத் தகவல் வரும் என்று தான் கனவில் கண்டதாக கூறி கிராம அதிகாரியின் கடிதம் வந்திருப்பதைக் கண்டு அனைவரும் வியந்தனர். பின் மாண்டவர் மூவர் தேகங்களை எடுத்துத் தகனம் செய்து விட்டு அக்கற்றூண் திருமாலின் திருசன்னதியின் முன் நட்டு பூசை செய்தனர்.*

**சின்னையனை வழிபட்டவர் கண்பார்வை பெறல்**

*சில வருடங்களுக்கு முன் சூலூரையடுத்த சிற்றூரிலிருந்த பெருங்குடித் தனக்காரர் ஒருவருக்குக் கண்ணொளி திடிரென மறைந்தது. அதனால் அவர் பெரிதும் வருந்தித் துன்பம் அடைந்தார். பின் அய்யனின் மகத்துவத்தை கேள்வியுற்ற அவர் அய்யன் கோயிலை அடைந்து அங்கிருந்தது சாவடியில் தங்கி அய்யனின் மீது மிகுந்த பக்தியுடன் பூசித்து வந்தார். அதை அறிந்த இராசியண்ணன் அவரைநோக்கி, இந்த கோயில் விசக்கடிக்கு சம்பந்தமான நோய்கள் தீருமே அல்லாமல் கண்ணொளி பெறுவதற்கு இங்கு காத்திருந்து பயனில்லை என்று கூறினார்.*

*அய்யன் அவரது கனவில் அதுவரையில் கண்ணொளி சரியாகும் என நம்பியிருந்த குடித்தனக்காரர் வருந்தி அன்றிரவு அய்யனை வேண்டி உறங்கினார். தோன்றி இன்று முதல் ஒன்பது நாட்களில் உனது கண்கள் முன்பு போல் ஒளி பெறும் என்று கூறி மறைந்தார். அக்கனவை பற்றி அவர் இராசியண்ணவிடம் தெரிவித்து பின் முன்பைவிட பன்மடங்கு பக்தியுடன் பூசித்து வந்தார். அய்யன் கூறிய படியே ஒன்பதாம் நாள் காலையில் அவர் படுக்கையில் இருந்து எழுந்த போது கண்ணொளி பெற்றார். பூசைகளைச் செய்தும், ஊருக்குச் சென்றார். அவர் மிக்க மகிழ்ச்சி அடைந்து அய்யனுக்கு சிறப்பு ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கியும் தன் வாழ்நாள் முழுவதும் பயனடைந்தர்.*

**தீர்த்தம் வழங்குவது, திருநீறு பூசுவதும்**

*அய்யன் கோயிலில் விசக்கடி இன்னும் பற்பல வியாதிகளால் பீடிக்கப்பட்டு கோயில் சத்திரங்களில் தங்கி வரும் பிரார்த்தனைக்காரர்களிடம் மகான் அய்யன் நேரில் தோன்றி தீர்த்தம் வழங்குவதும், புற்றுமண் பூசி வியாதிகளைப் போக்குவதும் சுவாமி தீர்த்தம் சுயமான நல்லெண்ணையாக மாறியது. பிரசாதமாகிய புற்றுமண் சர்க்கரையாக மாறியது. இவ்வாறு பற்பல அற்புதச் செயல்கள் அய்யனால் நிகழ்த்தப்பட்டு வருகிறது.*

*தங்களுக்கு ஏற்பட்ட சிக்கலை தீர்க்க வேண்டி இக்கோயிலுக்கு வந்து அய்யனை வணங்கி நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் செய்யும் செயல்களை கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம். அவை,*

- *விசக்கடி தீர்த்தல்*
- *வெண்குஷ்டம் தீர்த்தல்*
- *மனநோய் தீர்த்தல்*
- *நாகதோசம் கழிதல்*
- *திருமணம்*
- *கனவுத் தொல்லை நீங்கல்*
- *தொழில்வளம் பெருகுதல்*
- *மகப்பேறு கிட்டல்*
- *பூக்கேட்டல்*
- *முடிக்காணிக்கை செலுத்துதல்*

**விசக்கடி தீர்தல்**

*அக்காலத்தில் ஒருவருக்கு பாம்பு கடித்தால் அவரை குணப்படுவது என்பது தியலாத ஒன்றாக இருந்தது. இக்கோயில் உள்ளது. அதனைக் குணப்படுத்தும் மருத்துவ தலமாக இக்கோயிலுக்கு பாம்பு கடித்தவர்கள் வந்தால் முதலில் புற்று மண்ணை எடுத்து தாங்களே பூசிக்கொள்வார்கள் பின் பூசாரி அய்யனை வண்டிச் சுலோகத்தைச் சொல்வார்.*

***சைவக் குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர்***
***ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை***
***ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்***
***ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது***
***ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே (தேவாரம், பக்31)***

*என்று பதிகம்பாடி அப்பூதியடிகளின் மகனின் விஷத்தை இறக்கினார். அதனால் இந்த தேவாரத்தைக் கூறினால் பாம்பின் விஷம் நீங்கும் என்ற நம்பிக்கை இங்கு வந்து வழிபடும் மக்களுக்கு உள்ளது.*

*பின்பு பூசாரி அவர்கள் பாம்பு கடித்தவரிடம் 1:4 மண்டலம், 1:2 மண்டலம். 1 மண்டலம் என்று விஷத்தின் தன்மையைப் பொறுத்து உணவை பத்தியத்துடன் சாப்பிட்டு வருமாறு கூறுவார்.*

*உணவில் உப்பு, புளி, காரம் போன்றவற்றைக் குறைத்து உண்ணும்படி கூறுவார். ஊடல் முழுவதும் திருநீற்றை (புற்றுமண்) பூசச் சொல்லுவார். இதே அக்கோயிலில் கொடுக்கும் திருநீற்றை சுத்தமான இடத்தில் வைக்க வேண்டும். அப்புற்றுமண்ணை அதிகநாள் வீட்டில் வைக்க கூடாது. அதனைக் கால் மிதிபடாத இடத்தில் ஊற்ற வேண்டும். இன்றையக் காலகட்டத்தில் மக்கள் மருத்துவமனைக்குச் சென்றாலும் இங்கு வந்து விசக்கடிபட்ட இடத்தில் திருநீற்றைப் பூசி இறைவனை வேண்டிச் செல்கின்றனர். (தகவலாளர் வே.சந்திரன்,பல்லடம், வயது - 43)*

**வெண்குஷ்டம் தீர்த்தல்**

*இக்கோயிலுக்கு நூற்றுக்கு ஐம்பது சதவீதம் பேர் வெண்குஷ்டம், சொறி, சிரங்கு போன்ற தோல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களே வருகின்றனர்.தோல் நோய்களில் கொடுமையாக உள்ளத்தைப் பாதிக்கும் நோய் வெண்குஷ்டம், இதற்குப் பிறகு தான் சொரியாஸிஸ் என்கிற அரிப்புடன் கூடிய செதில், படை நோய் வருகிறது. இந்நோய்யோடு வருபவர்களுக்கு கோயிலின் தீர்த்தம், புற்றுமண் மஞ்சள் போன்றவற்றை கொடுத்தும் உணவில் பத்திய முறை பின்பற்றும்படி கூறி நோயைக் குணப்படுத்துவார், பின்பு அய்யனை வேண்டி அவர் துதியான,*

***தொல்லுலகில் பல்வினையும் இரவி கண்ட பனியது போல்***
***வல்லமையா லகற்றும் வாழைவனத் தய்யாவுனை***

***(சி.கு.நாராயணசாமி முதலியார், அய்யன் கோயில் வரலாறு)***

*திருஞானசம்பந்தர் அருளிய நாரையூர் பதிகத்தின் இப்பாடலால் வாழை வனத்தில் அருளும் இறைவனைத் துதித்தால் பாவங்கள் சூரியனைக் கண்ட பனிபோல துன்பம் நீங்கும் என்று கூறுகிறது. நல்லவர்களுக்கு அருள் புரியும் நாரையூர் நம்பனைத் தொழுவதால் துன்பங்கள் அகன்று மக்களின் நோயை நீக்கி குணப்படுத்துகிறார் என்று பொருள்படும்.*

**மனநோய் தீர்த்தல்**

*மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் இக்கோயிலுக்கு அய்யனை நம்பி வருகின்றனர். அவ்வாறு வருபவர்களை பூசாரி அய்யனின் துதியைப் பாட வைக்கிறார். பிறகு சிறிது சிறிதாக அவர்களின் மனநோய் குணமாக்கிச் செல்கின்றனர். இதனை வள்ளுவர்.*

***மனநலம் மன்னுயிர் காக்க மினநலம்***
***மெல்லாப் புகழுத் தரும் (குறள் 457)***

**நாகதோசம் கழித்தல்**

*கிரகங்களினால் ஏற்படும் குறைகள் தோசங்கள் என்றழைக்கப்படுகின்றது. குரு, கேதுக்களின் மத்தியில் மீதியுள்ள கிரகங்கள் இடம் பெற்றிருக்குமானால் அது கால சர்ப்பதோசம் எனப்படுகிறது. இத்தகைய தோசத்துடன் அய்யனை நம்பி வரும் பக்தர்களுக்குச் சிறப்பான முறையில் பரிகாரங்கள் செய்யப்பட்டு அவர்களது தோசம் நிவர்த்தி செய்ப்படுகிறது. அதனால் அதிகமான இதனால் பக்தர்களுக்கான திருமணத் தடை நீங்குகிறது. மக்கள் இக்கோயிலுக்கு வந்து பயனடைகின்றனர். இதனை,*

***தாங்கள் எண்ணியது நிறைவேறினால் அது தாங்கள் கும்பிட்ட தெய்வத்தால் நேர்ந்தது என நம்புகின்றனர். தங்களது விருப்பத்தைத் தெய்வம் நிறைவேற்றினால் அதற்கு நன்றிக் கடனாக ஏதேனும் ஒரு பொருளையோ அல்லது பூசையோ பொங்கலோ வைப்பதாக உறுதி அளிப்பர். இவ்வாறு இறைவனிடம் தங்கள் வேண்டுதல் பலிக்க மக்கள் நன்றிக் கடனாக வழங்குவோம் என்பது நேர்த்திக் கடன் ஆகும்.***

***(செ.யசோதா,பக் 1093)***

*என மக்களின் துன்டத்தினை நீக்கும் தெய்வத்திற்கு பரிகாரங்கள் செய்து நேர்த்திகடன் செலுத்தினால் நன்மை சேரும் என மக்கள் நம்பிக்கைக் கொண்டுள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வரிகளுக்கேற்ப அறிய முடிகிறது.*

**திருமணம்**

*திருமணம் என்பது ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையான சங்கமமாகும். ஓணம் என்ற சொல்லுக்குக் கூடுதல் என்பது பொருள்,*

***கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்***
***கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்***
***கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே (தொல்.கற்பியல் பா.140:1-3)***

*என்று தொல்காப்பியத்தில் கற்பியலில் இடம்பெறும் வரிகளின் மூலம் திருமணம் குறித்த செய்திகள் அறியப்படுகின்றது. இதனை,*

***ஒரு மனிதனைப் பக்குவமுள்ள மனிதனாகவும், பண்புள்ள மனிதனாகவும், முழுமையான மனிதனாகவும் மாற்றுவது திருமணம் என்பதை உணர்கிறோம்.***

***(முனைவர் ம.அரும்பு, பக் 1044)***

*ஏன திருமணம் குறித்த முக்கியத்துவத்தினை இக்கட்டுரையின் வரிகள் எடுத்து கூறுகிறது.*

*மக்கள் இக்கோயிலில் திருமணம் நடைபெற்றால் அவர்கள் எவ்விதக் குறையும் இல்லாமல் வளமாக வாழ்வார்கள் என்று மக்கள் நம்புகின்றனர். அதனால் அதிகப்படியான திருமணங்கள் இக்கோயிலில் நடைபெறுகின்றது. (தகவலாளர் - வே.சந்திரன்,பல்லடம்,வயது-43)*

*திருமணம் நடைபெறாமல் நாட்கள் தள்ளிப் போனால் மக்கள் இங்குள்ள அரசமரத்தில் மஞ்சள் கயிற்றை கட்டினால் திருமணத் தடை நீங்கும் என்று நம்பிக்கைக் கொண்டு மஞ்சள் கயிற்றை கட்டிச் செல்கின்றார்கள்.*

**கனவுத் தொல்லை நீங்குதல்**

*கனவில் பாம்புகள் வந்து அச்சத்தை ஏற்படுத்தினால், இக்கோயிலில் பால் அபிசேகம் செய்து, திருநீற்றை(புற்றுமண்ணை) வீட்டில் தெளித்தும், தலையணையின் அடியில் வைத்து உறங்கினால் கனவுத் தொல்லை நீங்கும் என்று மக்கள் நம்புகின்றார்கள்.*

**தொழில்வளம் பெருகுதல்**

*விவாசயத்திற்கு தங்கள் நிலம் பலன் அளக்காத நிலையில் மக்கள் இக்கோயிலுக்கு வந்து புற்றுமண்ணை கொண்டுபோய் தங்கள் நிலத்தில் தெளிப்பதால் விவசாயம் செழிக்கும் என்று மக்கள் நம்புகின்றனர்.*

*அய்யன் கால்நடைகளை வளர்த்ததால் மக்களும் தங்கள் மாடுகளின் மீது றைத் தெளிப்பதால் பால்வளம் பெருகும் என்றும் தங்கள் தொழில் வாம் வருகும் என்றும் மக்கள் நம்புகின்றனர். (தகவலாளர் - வே.சந்திரன்,பல்லடம், வயது - 43)*

**மகப்பேறு கிட்டல்**

*ஒரு பெண்ணுக்கு குழந்தை பாக்கியம் என்பது இறைவன் கொடுக்கும் வரம் ஒரு பெண் தாய்மை அடையும் போதே முழுமை அடைகிறாள் என்று கூறினால் மிகையாகாது. இதன் முக்கியத்துவத்தினை,*

*எவ்வளவு பெரிய செல்வந்தராக இருந்தாலும் படைப்பு பல படைத்து பலரோடு உண்ணும் வளமுடையவராக இருந்தாலும் மக்கட்பேறு இல்லையெனில் வாழ்நாள் பயனற்றது என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். (முனைவர் இரா.ஜோதிமணி,பக் 377)*

*என கட்டுரையின் கருத்தின் வழி அறிய முடிகிறது. இவ்வுயரிய குழந்தைச் செல்வம் இறைவனது கருணைத் திறந்தால் வாய்க்கப் பெறுவதாகும். அக்குழந்தை செல்வம் இல்லாதவர்கள் வாழுகின்ற நாட்கள் பயனற்றதாகும் என்று புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது*

***படைப்புப் பல படைத்து பலரோடு உண்ணும்***
***உடைப் பெருஞ்செல்வர் ஆயினும் இடைப்படக்***
***குறுகுறு நடந்து சிறுகை நீட்டி***
***இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்***
***நெய்யுடைய அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்***
***மயக்குறு மக்களை இல்லிலோர்க்குப்***
***பயக்குற இல்லை தாம் வாழும் நாளே (புறம், ப.188)***

*இதனையே திருவள்ளுவரும்.*

***பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த***
***மக்கட்பேறு அல்ல பிற (குறள், ப.188)***

*என்று கூறுகின்றார்.*

*நீண்ட நாட்களாக குழந்தைபேறு இல்லாதவர்கள் அய்யனை வழிபட்டு மூலஸ்தானத்திலுள்ள புற்றுக்குத் தினமும் பால்விட்டுச் செல்வதால் மகப்பேறுகிட்டும் என்று நம்புகின்றனர். பெண்கள் மூலஸ்தானத்திற்குள் செல்லும் உரிமையில்லாததால் அப்பெண்ணின் கணவன் பால் ஊற்றிவிட்டு வரலாம்.*

*மேலும், அக்கோயிலில் உள்ள அரசமரத்தில் தொட்டில் வளையல் போன்றவற்றைக் கட்டும் பழக்கமும் உண்டு. குழந்தை பாக்கியம் கிடைத்த பின்பு அவைகளை அவிழ்த்துவிடுவார்கள்.*

**பூக்கேட்டல்**

*அய்யன் கோயிலில் அமாவாசை, கிருத்திகை போன்ற நாட்களில் பூக்கேட்கும் பழக்கம் உள்ளது. கிணறு வெட்டல், வாகனம் வாங்குதல், திருமணத்திற்கு உத்தரவு கேட்டல் போன்ற செயல்களுக்குப் பூக்கேட்கப்படுகிறது. அதிலும் திருமணத்திற்கே அதிக அளவு மக்கள் பூக்கேட்கின்றனர்.*

*சிவப்பு, வெள்ளை மலர்களைத் தனித்தனியாக இரண்டு பொட்டலங்களாகக் கட்டி அய்யன் முன்பு வைத்து தாங்களாகவோ அல்லது ஒரு குழந்தையை வைத்தோ அந்தப் பொட்டலத்தை எடுக்கச் சொல்கின்றனர். சிவப்பு பூ வந்தால் திருமணத்திற்கும், வெள்ளைப் பூ வந்தால் மற்ற நிகழ்ச்சி களுக்கும் நல்ல சகுனமாக நம்பப்படுகிறது. (தகவலாளர் - வே.சந்திரன், பல்லடம், வயது-43)*

**முடிக்காணிக்கை செலுத்துதல்**

*குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும், தொடர்ந்து பல குழந்தைகள் பிறந்து நிலைக்காமல் இறக்கும் போதும், அடுத்த பிறந்த குழந்தை நிலைத்தால் அக்குழந்தையின் முடியைக் காணிக்கையாகக் கொடுப்பதாக வேண்டிக் கொண்டும். மற்ற வேண்டுதலுக்காகவும் முடியைக் காணிக்கையாகக் கொடுக்கிறார்கள். (தகவலாளர் - வே.சந்திரன்,பல்லடம்,வயது-43)*

**பொங்கல் வைத்தல்**

*மக்கள் தங்கள் மனதில் நினைத்த காரியம் நடந்து அதில் வெற்றி பெற்றால் அய்யனுக்கு நன்றி கூறும் விதமாக கோயிலுக்கு வந்து பொங்கல் வைக்கின்றனர். அதை அவர்களது நம்பிக்கையாகக் கொண்டுள்ளனர்.*

**நேர்ந்து விடல்**

*வீட்டில் வளர்க்கும் ஆடு, மாடு, சேவல் போன்றவைகள் நிலைக்காது இறந்து கொண்டே இருந்தாலே அல்லது நோய் ஏற்பட்டுக் கொண்டே இருந்தாலோ அய்யனை வேண்டினால் நோய் நீங்கும் என்று நம்புகின்றார்கள். தங்கள் வேண்டிக் கொண்ட வேண்டுதல் நிறைவேறினால் அவைகளை கோயிலுக்கு நேர்ந்து விடுகிறார்கள். இவைகளை கோயில் நிர்வாகமே பாதுகாக்கிறது. (தகவலாளர் - வே.சந்திரன்,பல்லடம்,வயது-43)*

*மனிதர்களின் மனதில்ஏற்படும் நம்பிக்கைகள் பலவாறாக உள்ளன. அவை அவரவர் பிறக்கும், வளரும், சூழல்களுக்கு ஏற்ப தோன்றுகின்றன.ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கை இன்னொருவருக்கு மூட நம்பிக்கையாக கருதப்படுகிறது. (பொ.கார்த்திகா,பக் 496)*

*என நம்பிக்கை குறித்த பொதுவான கருத்தினை இக்கட்டுரையின் வழி அறிய முடிந்தது. இருப்பினும்*

*இம்மக்கள் காலங்காலமாக முன்னோர்கள் வகுத்த மரபினையே தங்களது நம்பிக்கை என கருதி இது போன்ற வேண்டுதல்களை நிறைவேற்றி வருவதாக களஆய்வின் வழி அறிய முடிகிறது.*

**தவணை வைத்தல் கூடாது**

*கோயிலுக்கு வருவதாக வேண்டிக்கொண்டு போகாமல் நாட்களைக் கடத்திக் கொண்டே இருந்தால் பாம்பு தன்னை அவர்களது கண்ணுக்கு காட்டிக் கொண்டே இருக்கும் என்று மக்கள் அச்சம் கொண்டு இக்கோயிலுக்குத் தவணை சொல்லாது நினைத்ததும் வந்து விடுவதை நம்பிக்கையாகக் கொண்டுள்ளனர்.*

**கோயிலும் ஒற்றுமையும்**

*கோயிலின் உள்ளே தான் மக்கள் தங்களுக்குள் எவ்வித வேறுபாடும் இல்லாமல் ஒன்றாக இருக்கின்றனர். இதனை,*

***ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே-நம்மில்***
***ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே***
***(மகாகவி பாரதியார் கவிதைகள் ப.201)***

*என்று பாடினார் பாரதி. அத்தகைய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக திகழ்வது அய்யன் கோயிலாகும். இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் அனைவரும் தங்களுக்குள் வேற்றுமையின்றி ஒற்றுமையுடன் அய்யனை வழிபட்டுச் செல்கின்றனர் இவ்வூரில் உள்ள எல்லாச் சமயத்து மக்களும் இக்கோயிலுக்கு வருவது இதன் தனிச் சிறப்பாக உள்ளது.*

*விசக்கடி போன்ற நோய்கள் அனைத்தும் புற்று மண்ணாலே தீர்க்கப்படுகிறது. இதனால் இக்கோயிலுக்கு கோவை மாவட்ட மக்கள் ஊர்களிலிருந்தும் கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மற்ற மாநிலங்களிலிருந்தும் கட வந்து அய்யனை வழிபட்டுச் செல்கின்றனர் மற்றும் அவர்களால் இயன்ற உதவிகளைச் செய்கின்றார்கள்.*

**பக்தர்களும் கொடையும்**

*அய்யன் கோயிலுக்கு வரும் மக்கள் அனைவரும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்கின்றனர். அன்னதானத்திற்கு உதவுதல், கோயிலுக்கு அன்பளிப்பு வழங்குதல், அய்யனை வேண்டி காணிக்கை செலுத்துதல் போன்ற பல வழிகளில் கொடை வழங்குகிறார்கள்.*

**கோயிலின் வருவாய்**

*அய்யம்பாளையம் அய்யன் கோயிலுக்கு சொந்தமான நிலங்கள் உள்பட அனைத்து சொத்துக்களையும் சேர்த்து சுமார் ரூ.50,00,000க்கு மேல் மதிப்பிற்குரியது. தற்போது கோயிலுக்கு சுமார் 1 கோடிக்கும் மேல் வருமானம் வருகிறது. இந்த வருமானம் அனைத்தும் பக்தர்களால் பிரார்த்தனை. உண்டியலில் காணிக்கைகளாகவும், முதலீடு வட்டிகள், அர்ச்சனை சீட்டுகள் விற்பனை, குத்தகை இனங்கள் ஆகிய பலவகைகளில் வருவவையாகும். ஆய்யன் கோயிலை அரசு தன் அறநிலை கண்காணிப்பின்கீழ் எடுத்து மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றது.*

**தொகுப்புரை**

*வாழைத்தோட்டத்து ஐயன் கோயிலானது முன்னோர்களின் வழிபடி, அறிவியல் அடிப்படையில் அமைக்கப்பட்டவையாகும். அன்று முதல் இன்றுவரையுள்ள தலைமுறையினர் இக்கோயிலின் மீதான வழிபாட்டினையும், மருத்துவ தீர்வினையும் பேணி பாதுக்காத்து வருகின்றனர். நால்வர் சன்னதிகள்,*

*நடராசர் சன்னதசிந்தாமணி விநாயகர், நவகிரகங்கள், சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை, அரசமரப் பிள்ளையார் சன்னதி, இராகு கேது சிலைகள் என அனைத்து சிறப்புப் பெற்ற வடிவமைப்புகளும் தமிழ்நாடு அரசின் உதவியோடு அமைக்கப்பட்டவையாகும். கோயிலின் அமைப்புகள், மருத்துவம் சார்ந்த வழிபாட்டின் தன்மைகள் என அனைத்து முன்னோர்களின் மரபினையும் அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே அக்கோயிலினை சுற்றியுள்ள மக்களின் நம்பிக்கை என்பதை களஆய்வின் மூலம் அறிய முடிகிறது.*

**துணைநூற்பட்டியல்**


1. முனைவர் ம. அரும்பு. பச்சைமலை மலையாளி மக்களின் வாழ்வியல் சடங்குகள். புதிய அவையம், தொகுதி 07, ஜீன் 2023, ஐகுகுமீ: 2456-821 பக். 1044.
2. பொ.கார்த்திகா. நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்.பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம், தொகுதி 1, 2019, ஐகுகுமீ: 978-9385165-02-3, பக். 496.
3. வை.கோவிந்தன், மகாகவி பாரதியார் கவிதைகள். நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ்(பி)லிட், ஜீலை 2003. பக்.201.
4. கள ஆய்வு. தகவலாளர். வே. சந்திரன், பல்லடம், வயது - 43.(11.02.2023)
5. ந.சித்ரா. ஆழியவாய்க்கால் ஸ்ரீ அழகிய வேம்பையனார் ஆலய தல வரலாறு. பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம், தொகுதி 1, 2019, ஐகுகுமீ: 978-9385165-02-3, பக். 236.
6. முனைவர். ச.வே. சுப்பிரமணியன். தொல்காப்பியம் முழுவதும். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608001. முதல்பதிப்பு - ஜீன் 2008
7. அ.ச. ஞானசம்பந்தன், திருவாசகம் சில சிந்தனைகள். தொகுதி-1 கங்கை புத்தக நிலையம், மே 1999.
8. ஞா.தேவநேயப்பாவாணர். திருக்குறள் முழுவதும். ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை 600017. முதல்பதிப்பு - டிசம்பர் 2000.
9. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை. புறநானூறு-பகுதி1. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18. முதல் பதிப்பு-1947.
10. கள ஆய்வு. தகவலாளர். சி.கு. நாராயணசாமி முதலியார், பல்லடம், வயது 81. (02.04.2023)
11. சிவ.ஆ. பக்தவச்சரம், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம். தொகுதி- 4, நல்லூர்ப்பேட்டை குடியாத்தம், பிப்ரவரி 2017.
12. செ.யசோதா. கொங்கு வேளாள பண்ணைக்குல மக்களின் நம்பிக்கைகள். நவீனத் தமிழாய்வு (பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்). பகுதி-4, மார்ச் 2021, ஐகுகுமீ:2321-984ஙீ, பக். 1093
13. இரா.ஜோதிமணி. தமிழர் பண்பாட்டு உணர்த்தும் வாழ்வியல் நெறிகள். பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம், தொகுதி 1, 2019, ஐகுகுமீ:978-9385165-02-3, பக். 377.


## References


1. Arumbu, M. (2023). The Life-Cycle Rituals of the Malayali People of Pachamalai. PuthiyaAvaiyam, Vol. 7, p. 1044. ISSN: 2456-821.
2. Karthika, P. (2019). Beliefs and Customs. International Research Conference Proceedings, Vol. 1, p. 496. ISBN: 978-9385165-02-3.
3. Govindan, V. (2003). Poems of Mahakavi Bharathiyar. New Century Book House (P) Ltd., p. 201.
4. Informant: V. Chandran. Palladam. Age: 43.(11.02.2023)

5. Chitra, N. (2019). The Historical Background of Sri Alagiya Vembaiyanar Temple at Azhiyavaikkal. International Research Conference Proceedings, Vol. 1, p. 236. ISBN: 978-9385165-02-3.
6. Subramanian, S. V. (2008). Complete Tolkappiyam. Meyyappan Publications, Chidambaram – 608001. First Edition.
7. Gnanasambandan, A. C. (1999). Thiruvasagam: Some Reflections (Vol. 1). Ganga Book Centre.
8. Devaneya Pavanar, G. (2000). Complete Thirukkural. Sri Hindu Publications, Chennai – 600017. First Edition.
9. Duraisamy Pillai, Olvai S. (1947). Purananuru (Part 1). Saiva Siddhanta Publishing Society, Chennai – 18. First Edition.
10. Informant: C. K. Narayanasamy Mudaliyar. Palladam. Age: 81.(02.04.2023)
11. Bhakthavachalam, S. A. (2017). Thevaram Hymns Composed by Saint Thirunavukkarasar (Vol. 4). Nallurpettai, Gudiyatham.
12. Yasodha, S. (2021). Beliefs of the Kongu Vellalar Pannaikkula Community. Modern Tamil Studies (International Multidisciplinary Tamil Research Journal), Part 4, p. 1093. ISSN: 2321-984X.
13. Jothimani, R. (2019). Ways of Life Reflecting Tamil Cultural Values. International Research Conference Proceedings, Vol. 1, p. 377. ISBN: 978-9385165-02-3.